கூட்ட எண் 13
2017 - 2018 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 02.02.2018.

**2018-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02.02.2018ந் தேதி வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

## பொருள்கள்

**1)** சென்னை - 600106, மறுவரையறை ஆணையத்தால் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதலின்படி, இந்நகராட்சியின் இயற்கை அமைப்பு மற்றும் தெருக்களின் இயல்பான அமைப்பினை கருத்தில் கொண்டு, வார்டு மறுவரையறைக்கான வரைவு கருத்துரு தயாரித்து வரைபடங்கள், படிவங்கள் மற்றும் சான்றுகள் உரிய வழிமுறையாக மறுவரையறை ஆணையத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, வரைவு கருத்துரு மறுவரையறை ஆணையத்தின் பரிசீலனைக்குபின், பொதுமக்கள், அரசியல் கட்சிகள், மற்றும் பல்வேறு அமைப்புகளின் ஆலோசனைகள், ஆட்சேபனைகள் தெரிவிக்க கோரி தினசரி நாளிதழ், நகராட்சி மற்றும் அரசு அலுவலகங்களில் (மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உட்பட) அறிவிப்பு பலகைகளிலும் விளம்பரம் செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து பல்வேறு கருத்துகள் குறிப்பிட்டு இந்நகராட்சியிலும், மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் நேரடியாக 14 மனுக்கள் வரப்பெற்றது. மேலும், வார்டு வரைவு மறுவரையறை ஆட்சேபனை மற்றும் கருத்துருக்கள் தொடர்பாக 23.01.2018 அன்று வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கான ஆய்வுக் கூட்டம் உறுப்பினர்-செயலர், மறுவரையறை ஆணையம், சென்னை அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

மேற்காணும் ஆய்வுக் கூட்டத்தில் ஏற்கனவே வரப்பெற்ற 14மனுக்களில், ஏற்கனவே தெரிவித்த கருத்துகளையே தெரிவித்து 2 மனுக்கள் வரப் பெற்றது. வரப் பெற்ற அனைத்து மனுக்களை பரிசீலனை செய்யப்பட்டு, மறுவரையறை அலுவலர் / ஆணையர் கள ஆய்வு செய்ததில், 3 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டும், 11 மனுக்கள் நிராகரிப்பட்டு மேற்பார்வை அலுவலர் / மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், வேலூர் மற்றும் மாவட்ட மறுவரையறை அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு, இறுதி வரைவு வார்டு மறுவரையறை கருத்துருக்கள் தயார் செய்யப்பட்டுள்ளது. இதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேலும், கருத்துருவை மறுவரையறை ஆணையம், சென்னை அவர்களுக்கு உரிய வழிமுறையாக சமர்ப்பிக்க மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1720/எப்1/2017)

2) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர்-12 அவர்களின் மின்னஞ்சலில் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டம் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டது. ஆரணி நகராட்சிக்கு புதிய குடிநிர் அபிவிருத்தி திட்ட செயல்படுத்த அரசாணை எண் 14, நாள் 27.01.2014ல் மதிப்பீடு ரூ.3626.20 இலட்சம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தமிழ்நாடு குடிநிர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட நிர்வாகம் அனுமதியில் புதிய குடிநீர் திட்டத்தின் கீழ் 7000 குடிநிர் வீட்டு இணைப்புகள் வழங்குவற்கு வழிவகை செய்யப்பட்டிருந்தது. தமிழ்நாடு குடிநிர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கண்ட பணிக்கு திருத்திய மதிப்பீடு தயார் செய்து தொழிநுட்ப அனுமதி பெறும்போது மேற்படி குடிநீர் வீட்டு இணைப்புகள் வழங்குவற்கான இனத்தினை மதிப்பீட்டிலிருந்து நீக்கப்பட்டு, தற்போது

மேற்கண்ட பணியில் இரண்டு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதற்கான ஒப்புதல அளிக்கப்பட்டுள்ளது. குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது. ஆனால் சோதனை ஓட்டம் செய்யப்படாமல் உள்ளது. ஆற்காடு புதிய தலைமை நீரேற்று நிலையத்தில் ஆறு எண்ணிக்கையில் உறிஞ்சு கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு தரைமட்ட நீர் சேகரிப்பு தொட்டி கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. புதிய பிரதான நீரேற்று குழாய் பதிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே உள்ள பழைய நீரேற்று நிலையத்திலிருந்து நகருக்கு வரும் பழைய நீரேற்று குழாய் மாற்றி அமைக்கும் பணி செய்யப்படாமல் உள்ளது. மேற்படி பணிகள் முடிக்கப்பட்டு சோதனை ஓட்டம் மேற்கொண்டால் மட்டுமே மேற்கண்ட குடிநீர் திட்டம் முழுமையாக மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது ஆரணி நகராட்சியில் 15935 சொத்துவரி விதிப்புகள் உள்ளது. குடிநிர் இணைப்பில் வீட்டு உபயோகம் 5775 வணிக உபயோகம் 76ல் உள்ளது. மேற்கண்ட குடிநீர் திட்டம் முடிந்த பிறகு மீதமுள்ள வீடுகளுக்கு7441 புதிய குடிநீர் இணைப்புகள் வழங்க ரூ. 526.30 இலட்சத்திற்கும், விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இதனை நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் வேலூர் அவர்களின் மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களுக்கு பிரேரரணை அனுப்ப மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 139/இ1/2018)

3) ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP)-2017-2018-ன் கீழ் மதிப்பீடு ரூ.100.00 இலட்சத்தில் சாலைப் பணிகள் மேற்கொள்ள 22.12.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இணையதளம் மூலம் மற்றும் பெட்டி வாயிலாகவும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப் பெற்றுள்ளது தொழில் நுட்ப பரிந்துறைக்குழுவின் பரிசீலனைக்குட்படுத்தப்படட இரண்டு ஒப்பந்ததாரர்களில் தொழில்நுட்ப விவரங்கள் அடங்கிய உரையில் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்கள் ஒப்பு நோக்கி ஆய்வு செய்ததில், ஒப்பந்த நமுனாவில் குறிப்பிட்டிருந்த அனைத்து இனங்களிலும், இரண்டு நபருமே தகுதியுடையவிராகிறார் என குழுவின் ஒப்பு நோக்கு பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழில் நுட்ப குழுவின் பரிந்துரையின் பேரில் தொழில் நுட்ப தகுதியின் அடிப்படையில் தேர்ச்சி பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைவிகிதம் அடங்கிய உறையினை 10.01.2018 அன்று காலை 10.00 மணியளவில் பிரிக்கப்பட்டது. அதன் பேரில் தயாரிக்கப்பட்ட ஒப்பு நோக்கு பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | வழங்கப்பட்ட விலை விகிதம் ரூ. | வழங்கப்பட்ட விலை விகிதம் சதவிகித்தில் |
|---|---|---|---|---|
| 1 | திரு. கே. லஷ்மணன், ஒப்பந்ததாரர், நெ. 46/A பிள்ளையார் கோயில் தெரு, களம்பூர், | 100.00 | ரூ. 9897036,13 (Including GST 12%) | 0.02% குறைவு |
| 2 | திருமதி. எஸ். உஷாராணி, ஒப்பந்ததாரர், நெ. 16/45 மருசூரான் தெரு, ஆரணி. | | ரூ. 9912251.72 (Including GST 12%) | 0.14% அதிகம் |

அலுவலக குறிப்பு :- வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளி விகித ஒப்பு நோக்கு பட்டியலின் அடிப்படையில் திரு. கே. லஷ்மணன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள விலைப்புள்ளியினை ஏற்கலாம். பணி உத்தரவு வழங்கவும் அனுமதியளிக்கலாம். (கோப்பு எண் 1631/இ1/2017)

.

**4)** இந்நகராட்சியின் கீழ்குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களை அரசாணை எண் 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19.09.2008-ன்படி, 2018-2019 முதல் 2020-2021 வரை (01.04.2018 முதல் 31.03.2021 வரை) அனுபவித்துக் கொள்ளும் உரிமையை பொது ஏலம் விடுவதற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் ஏல நிபந்தனை மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | ஏல விளம்பரம் | ஏலப் பொறுப்பு தொகை ரூ. | சொத்து மதிப்பு சான்றிதழ் ரூ. | தாசில்தாரிடமிருந்து சால்வன்சி பெறாதவர்கள் ஏலத்தின் போது செலுத்த வேண்டிய பொறுப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | பழைய மற்றும் புதிய பேருந்து நிலையங்களில் வரும் பேருந்துகளுக்கு மட்டும் கட்டணம் வசூலிக்கும் உரிமை | **10,00,000/-** | **20,00,000/-** | **15,00,000** |
| 2 | பழைய மற்றும் புதிய பேருந்து நிலையங்களில் சுக்கு காபி, முறுக்கு, இட்லி, ரொட்டி, பழம் ஆகிய இதர தட்டுக்கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமை | **1,00,000/-** | **2,00,000/-** | **2,00,000/-** |
| 3 | மாடு அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்தல் | **1,00,000/-** | **3,00,000/-** | **2,00,000/-** |
| 4 | மாடு அறுக்கும் இடத்தில் உள்ள 10 கடைகளில் கட்டணம் வசூல் செய்தல் | **1,00,000/-** | **3,00,000/-** | **2,00,000/-** |
| 5 | நகராட்சிக்கு பாத்தியப்பட்ட புளிய மரங்கள், இலவம்பஞ்சு மரங்கள், மாமரங்கள், தென்னை மரங்களின் மகசூல்களை மட்டும் அனுபவித்தல் | **10,000/-** | **50,000/-** | **20,000/-** |
| 6 | புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை | **3,00,000/-** | **10,00,000/-** | **5,00,000/-** |
| 7 | புதிய பேருந்து நிலையத்தில் சைக்கிள் ஸ்டெண்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை (நகராட்சி நிர்ணயிக்கும் இடம் மற்றும்அளவுப்படி) | **2,50,000/-** | **10,00,000/-** | **5,00,000/-** |
| 8 | சூரியகுளம் மீன் பிடித்தல் குத்தகை | **10,000/-** | **50,000/-** | **20,000/-** |
| 9 | பழைய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை | **3,00,000/-** | **10,00,000/-** | **5,00,000/-** |
| 10 | பழைய பேருந்து நிலையத்தில் சைக்கிள் ஸ்டெண்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை (நகராட்சி நிர்ணயிக்கும் இடம் மற்றும்அளவுப்படி) | **2,50,000/-** | **10,00,000/-** | **5,00,000/-** |

அலுவலக குறிப்பு :- 1. வ.எண் 1 முதல் 10 வரை உள்ள குத்தகை இனங்கள் அனைத்தும் ஏலம் எடுப்பவர்கள் ஏல முழுத்தொகையையும் ஏலம் ஒப்படைப்பதற்கு முன்பே ஒரே தவணையில் செலுத்த வேண்டும். 2. மேற்படி குத்தகை ஏல விளம்பரத்தினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும், குத்தகை ஏல விளம்பர அறிக்கைகள் 250 பிரதிகள் உள்ளூர் அச்சகத்தில் விலைப்புள்ளி கோரி அச்சடித்துக் கொள்ளவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் 206/அ3/2018)

**தனிஅலுவலர்,**
**ஆரணி நகராட்சி**

கூட்ட எண் 14 | நகராட்சி அலுவலகம்,
2017 - 2018 -ம் ஆண்டு | ஆரணி,
நாள் 19.02.2018.

**2018-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19.02.2018ந் தேதி திங்கட் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**பொருள்கள்**

**இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்திட** 4**வது மாநில உயர்நிலைக்குழு கூட்ட நடவடிக்கை நாள்** 12.07.2016 **அன்று ரூ.**450.80 **இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான அரசாணை எண்** 334 **நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்** 23.08.2016**ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட உள்ள பணிகளுக்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மன்றத் தீர்மான எண்** 100, **நாள்** 22.08.2016**ல் ரூ.** 450.80 **லட்சத்தில் ஒப்புதல் பெறப்பட்டு இவ்வலுவலக கடித எண்** 999/**இ**1/2016 **நாள்** 20.10.2016**ல் நிர்வாக அனுமதிக்கு கடிதம் அனுப்பப்பட்டதற்கு, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்** 19659/**பி**3/2016 **நாள்** 01.12.2016**ல்** (Bio Mining) **பணிக்கான தொகை ரூ.** 103.80 **லட்சம் போக ரூ.**347.00 **லட்சத்தில் கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதியளிக்கப்பட்டது..**

| Sl No | Details of works | Estimate Cost (Rs in Lakhs) | Package Amount (Rs in Lakhs) |
|---|---|---|---|
| 1 | Containerized Push carts | 2.80 | 2.80 |
| 2 | Tipper Lorry | 16.00 | 16.00 |
| 3 | Pre Processing Machineries such as Receiving conveyors, manual segregation conveyor, Feeding conveyor, 100/75 mm trammel, Accept conveyor, Reject conveyor cum manual sorting conveyor, Organic Shredder, organic shredder output conveyor, and Refinement section of Mechanical Screener with conveyors of input with chute and manure and output conveyor. Resource Recovery Center with sorting conveyor, Plastic Pulverize, Baling Machine, Dry Washer and Control Panel | 70.00 | 254.00 |
| 4 | Compost Pad | 75.00 | |
| 5 | 1/3rd roof over the compost Pad | 35.00 | |
| 6 | Pre Processing Shed for Machineries | 54.00 | |
| 7 | Dozing cum Tilting Vehicles | 20.00 | |
| 8 | Administrative Building | 5.00 | 68.40 |
| 9 | Labour Rest Room | 8.00 | |
| 10 | Watchman shed | 1.50 | |
| 11 | Water Supply Arrangements with all around piping | 6.50 | |
| 12 | Electrical Arrangements | 4.00 | |
| 13 | Manure godown | 2.50 | |
| 14 | Compound wall | 30.00 | |

| | | | |
|---|---|---|---|
| 15 | Internal Road | 10.00 | |
| 16 | Green Belt | 0.90 | |
| 17 | I E C Activities | 5.80 | 5.80 |
| | Total Project Cost | 347.00 | 347.00 |

மேற்குறிப்பிட்டுள்ள பணிகளில் வரிசை எண் 01ல் ரூ. 2.80 லட்சத்தில் தள்ளு வண்டி வாங்கவும், வரிசை எண் 02, ரூ. 16.00 லட்சத்தில் டிப்பர் லாரி வாங்கவும், வரிசை எண் 17ல் ரூ. 5.80 லட்சம் தொகையில் I E C Activities பணிகளை மேற்கொள்ளவும், மீதமுள்ள தொகை ரூ. 322.40 லட்சத்தில் 35 TPD Capacity-யுடன் கூடிய ஒட்டு மொத்த திடக்கழிவு மேலாண்மை அமைப்பு ஏற்படுத்துவதற்கான ஒப்பந்த படிவம் (Bid Document) நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண் 26678/2016/DO1 நாள் 10.02.2017ல் அனுமதியளித்துள்ளார்.

மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் 24.01.2017 அன்று நடத்தப்பட்ட கூட்டத்தில் இப்பணியில் உட்படுத்தப்பட்டுள்ள கட்டுமான பணிகளை தனியாக பிரித்து தொழில் நுட்ப அனுமதி பெறும்படி அறிவுறுத்தப்பட்டது. இதன்பேரில், Processing Unit.-ற்கான 1/3 roof, Compost Pad, Machinery Shed முதலியவற்றை நிறுவதல் பணிக்கு ரூ.164.00 லட்சத்திற்கு சிப்பம் 01 மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் பணிக்கு ரூ.68.40 லட்சம் மதிப்பீட்டில் சிப்பம் 02-ற்ககும் தொழில் நுட்ப அனுமதி வேண்டி கடிதம் சமர்ப்பிக்கப்பட்டு, இதில் ரூ.68.40 லட்சம் மதிப்பீட்டிற்கான பணிக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின்பேரில் 28.03.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.. இவ்வாறான நிலையில், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 24.05.2017 நாளிட்ட செயல்முறைகள் கடிதம் ந.க.எண் 11088 - 10 / 2017 / பி3-ல திருத்திய நிர்வாக அனுமதி பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது.

| Sl No | Details of works | Estimate Cost (Rs in Lakhs) | Package Amount (Rs in Lakhs) |
|---|---|---|---|
| 1 | Containerized Push carts | 2.80 | 2.80 |
| 2 | Tipper Lorry | 16.00 | 16.00 |
| 3 | (i) Compost Pad | 75.00 | 164.00 |
| | (ii) 1/3rd roof over the compost Pad | 35.00 | |
| | (iii) Pre Processing Shed for Machineries | 54.00 | |
| 4 | (i) Administrative Building | 5.00 | 68.40 |
| | (ii) Labour Rest Room | 8.00 | |
| | (iii) Watchman shed | 1.50 | |
| | (iv) Water Supply Arrangements with all around piping | 6.50 | |
| | (v) Electrical Arrangements | 4.00 | |
| | (vi) Manure godown | 2.50 | |
| | (vii) Compound wall | 30.00 | |
| | (viii) Internal Road | 10.00 | |
| | (ix) Green Belt | 0.90 | |
| 5 | I E C Activities | 5.80 | 5.80 |
| | Total Project Cost | 257.00 | 257.00 |

இதில் தொழிநுட்ப அனுமதி வழங்கப்பட்ட வரிசை எண் 1 மற்றும் 2 பணிகளுக்கு 09.06.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 12.06.2017ல் பணி ஆணை வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த குப்பைக் கிடங்கில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் (அலுவலக அறை, தொழிலாளர்களுக்கான கழிவறை, காவலர் அறை, உரம் சேமிப்பு கிடங்கு

அறை, சுற்றுச்சுவர், உட்புறசாலை, மின்வசதி, குடிநீர் வசதி மற்றும் பசுமை சூழல் ஏற்படுத்துதல்) பணிக்கு ரூ.68.40 லட்சம் மதிப்பீட்டில் 28.03.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதற்கு 12.06.17-ல் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது., தற்போது நகராட்சி பயன்பாட்டில் உள்ள 1.82ஏக்கர் எருகிடங்கில் ஏற்கனவே சேகரமாகியுள்ள குப்பைகளை அகற்றினால் மட்டுமே, இத்திட்டத்தினை செயல்படுத்தும் நிலை உள்ளது.

மேலும், இந்நகரில் தினசரி சேகரமாகும் குப்பைகளை நிரப்புவதற்கு போதிய இடமில்லாததாலும், அதனை அகற்றுவதற்கான சாத்திய கூறுகள் இல்லாததாலும், நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்கள் தனது ஆய்வுக் கூட்டத்தில் நகரப் பகுதிகளில் நகராட்சிக்கு சொந்தமான பொது பயன்பாட்டிற்கான இடங்கள் பூங்காக்கள் மற்றும் சுடுகாடு முதலிய இடங்களை தெரிவு செய்து Micro Composting முறையில் அறிவியல் ரீதியாக அந்தந்த பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை உரமாக்க நடவடிக்கை மேற்கொள்ளவும், ஏற்கனவே வழங்கப்பட்ட திருத்திய நிர்வாக அனுமதியின்படி உள்ள ரூ.257.00 லட்சத்தில் தள்ளுவண்டி, டிப்பர் லாரி வாங்கியதற்கான தொகை போக மீதமுள்ள தொகை ரூ.232.40 லட்சம் தொகையில் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்து திருத்திய நிர்வாக அனுமதி பெற கருத்துரு அனுப்ப அறிவுறுத்தியதின் அடிப்படையில் கீழ்காணும் நகராட்சிக்கு சொந்தமான இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | இடத்தின் பெயர் | பிளாக் எண் | சர்வே எண் | பரப்பளவு ச. மீட்டர் | வார்டு விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 31 நகராட்சி அலுவலக வளாக OHT பின்புறம் | C / 6 | 3 / 1 | 7085.00 | 5.6.7.8.9.20.31.32 | 40.00 |
| 2 | வார்டு எண் 13 கண்ணப்பன் நகர் (பூங்கா) | F / 7 | 24 | 730.00 | 10 முதல் 16 | 40.00 |
| 3 | வார்டு எண் 25 பாலாஜி நகர் (பூங்கா) | B / 1 | 2/54 | 3481.00 | 25 முதல் 29 | 37.00 |
| | 3a) சுற்றுச் சுவர் அமைத்தல் | | | | | 6.00 |
| 4 | வார்டு எண் 29 காந்தி நகர் (பூங்கா) | B / 4 | 127 | 809.59 | 17 முதல் 19 & 21 முதல் 24 | 38.00 |
| 5 | வார்டு எண் 30 ஜெயலட்சுமி நகர் (பூங்கா) | C / 11 | 67 | 2361.05 | 1,2,3,4,30,33 | 40.00 |
| | 5a) சுற்றுச் சுவர் அமைத்தல் | | | | | 17.00 |
| 6 | வேலப்பாடி எருகிடங்கில் சாலை வசதி செய்தல் | | | | | 14.40 |
| | மொத்தம் | | | | | **232.40** |

முன்னதாக ரூ.68.40 லட்சம் மதிப்பில் உரகிடங்கில் உட்கட்டமைப்பு வசதிகள் பணிக்காக வழங்கப்பட்ட பணி ஆணையை ரத்து செய்து, மேற்குறிப்பிட்டுள்ள 5 இடங்களில் Micro Composting முறையில் தினசரி சேகரமாகும் குப்பைகளை சுத்திகரிப்பு செய்ய கட்டமைப்பு ஏற்படுத்தவும், ஏற்கனவே உள்ள உரகிடங்கிற்கு சாலை வசதி செய்யவும், தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.232.40 இலட்சத்திற்கும், திருத்திய நிர்வாக அனுமதி பெருவதற்கும் நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர் வேலூர் மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை -5 அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி பணிகளுக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் ஒப்புதல் அளிக்கலாம்.

2. முன்னதாக 28.03.2017 அன்று ரூ. 68.40 லட்சம் மதிப்பீட்டில், உரக்கிடங்கில் உட்கட்டமைப்பு வசதிகள் பணிக்காக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, ஒப்பு நோக்குப்பட்டியல் அடிப்படையில், மன்றத் தீர்மான எண் 54 நாள் 12.06.2017ன்படி, குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமதி. எஸ். உஷாராணி அவர்களுக்கு 12.06.2017 அன்று வழங்கப்பட்ட பணி ஆணையை தற்போதுள்ள பணியின் அவசியத்தை கருதி ரத்து செய்யலாம். (கோப்பு எண் 999/இ1/2016)

தனிஅலுவலர்,
ஆரணி நகராட்சி

கூட்ட எண் 15
2017 - 2018 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 20.02.2018.

**2018-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21.02.2018ந் தேதி புதன் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**பொருள்கள்**

1) இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் டிசம்பர் 2017 மற்றும் ஜனவரி 2018 ஆகிய இரண்டு மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2) இந் நகராட்சி பொறியாளர் அவர்களின் டிசம்பர் 2017 மற்றும் ஜனவரி 2018 ஆகிய இரண்டு மாதத்தய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3) இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் டிசம்பர் 2017 மற்றும் ஜனவரி 2018 ஆகிய இரண்டு மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

4) இந்நகராட்சியில் கணினி பிரிவு, பொதுப் பிரிவு, பொறியியல் பிரிவு பொது சுகாதாரப் பிரிவு, மற்றும் நகரமைப்பு பிரிவுகளில் பயன்படுத்தப்படும் Cannon LBP 2900 பிரிண்டர் மற்றும் Cannon 328 Image Class முழுவதும் தீர்ந்த விட்டதால் அதற்கான HP Laser Jet 12A டோனர் 20 எண்ணிக்கை மற்றும் 328A டோனர் 10 எண்ணிக்கையில் வாங்க அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு சங்கத்தின் மூலம் வாங்கிக் கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ- 1,80,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.

5) உறுப்பினர் / செயலர், மறுவரையறை ஆணையம், சென்னை -108 அவர்களின் கடித ந.க.எண் 3174/தே.பொ-1/2017, நாள் 19.10.2017.-ல் தெரிவித்துள்ளதற்கிணங்க, ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளையும் வரன்முறைப்படுத்தும் (Delimitation) பணிக்கு தேவையான வகையில் வார்டுவாரியாக AUTO CAD - வரைபடங்கள் மற்றும் நகர எல்லையின் வரைபடங்கள் ஆகியன கணினியில் தாயரித்து வழங்க, கணினியில் (AUTO CAD) வரைபடங்கள் தயாரிக்கும் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப் பெற்ற விலைப்புள்ளிகள்

மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேலும், அதற்கான தோராய செலவினம் ரூ- 50000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| திரு. சதீஷ், கட்டிட பொறியாளர் SKM டிசைன்ஸ், 16/0 உசேன் காம்ப்ளக்ஸ், பள்ளிக்கூடத் தெரு, ஆரணி | திரு. சரவணன், Licensed Builidng Surveyor, 1-6A வ.ஊ.சி தெரு, ஆரணி | திரு. சீனுவாசன், Licensed Builidng Surveyor, 30A பாஸ்கர் காம்ப்ளக்ஸ், மார்கெட் ரோடு, ஆரணி |
| Perparation of Arani Town ward Map Boundary Delimitation Rs. 5000/- | Perparation of Arani Town ward Map Boundary Delimitation Rs. 5500/- | Perparation of Arani Town ward Map Boundary Delimitation Rs. 5300/- |
| Delimitation of Arani Town 33 Wards individual Ward Map Preparation Charge Rs. 19,800/- | Delimitation of Arani Town 33 Wards individual Ward Map Preparation Charge Rs. 20.625/- | Delimitation of Arani Town 33 Wards individual Ward Map Preparation Charge Rs. 21,450/- |
| A2 Size Fully Colour Printing Charge Rs. 250/- | A2 Size Fully Colour Printing Charge Rs. 270/- | A2 Size Fully Colour Printing Charge Rs. 260/- |
| A3 Size Fully Colour Printing Charge Rs. 100/- | A3 Size Fully Colour Printing Charge Rs. 110/- | A3 Size Fully Colour Printing Charge Rs. 110/- |

அலுவலக குறிப்பு :- 1.மன்றம் அனுமதிக்கலாம், 2. மேற்காணும் பட்டியலில் வ.எண் 1ல் கண்டுள்ள திரு.சதீஷ், கட்டிட பொறியாளர், என்பவர் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். 3. அவசர அவசியம் கருதி நகர மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி, பணிக்கு பணி உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 1720/எப்1/2017)

6) இந்நகராட்சியில் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை திருவண்ணாமலை அவர்களின் 2015-2016ம் ஆண்டின் வருவாய் நிதிக்கான தணிக்கை அறிக்கை பத்தி எண் 124ல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, தணிக்கை ஆண்டின் இறுதி விவரப்படி நிலுவையாக உள்ள தணிக்கை கட்டணம் தொகை ரூ.66705/-ஐ உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டு விவரம் தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி 2015-2016ம் ஆண்டிற்கான தணிக்கைக் கட்டணம் ரூ.66705/-யினை உரிய அரசு தலைப்பில் செலுத்த மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. வருவாய் நிதியிலிருந்து மேற்படி தொகையை செலுத்தலாம். (கோப்பு எண் 2706/எப்1/2017)

7) ஆரணி நகராட்சி கமண்டல நாகநதி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஜெனரேட்டரில் உள்ள பேட்டரி பழுதடைந்து ஜெனரேட்டரை சரிவர இயக்க முடியவில்லை. மேலும், மின்வாரியத்தால் அடிக்கடி மின்தடை ஏற்படுகின்ற காரணத்தால், குடிநீர் விநியோகப் பணிகள் பாதிக்கா வண்ணம் ஜெனரேட்டர் இயக்க வேண்டியுள்ளது. எனவே, மேற்படி, ஜெனரேட்டரில் ஆயில் சர்வீஸ் செய்யவும், பழுதாகியுள்ள பேட்டரியினை அகற்றிவிட்டு புதியதாக பேட்டரி பொருத்தவும் ஜெனரேட்டர் சப்ளை செய்த கிரிலோஸ்கர் ஆயில் இன்ஜின் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற M/s பாரத் டீசல் சேல்ஸ் அண்டு சர்வீஸ் நிறுவனத்தில் விலைப்புள்ளி கோரியதில், மேற்படி பணிகள் செய்ய ரூ. 21663/-ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி செலவினத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், இச் செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் 2886A/இ1/2017)

8) உறுப்பினர் / செயலர், மறுவரையறை ஆணையம் சென்னை - 106 அவர்களின் 29.12.2017ம் தேதிய கடிதம் ந.க.எண். 1720/எப்1/2017-ன்படி, ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கான வார்டு மறுவரையறை செய்யப்பட்ட வரைவு மறுவரையறை படிவங்கள் மற்றும் வரைபடம் வெளியிடப்பட்டு பொது மக்கள் பார்வைக்கு நகராட்சி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இவ்வரைவு வார்டு மறுவரையறையில் கருத்துக்கள், ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் எழுத்து பூர்வமாக நகராட்சி ஆணையளர், ஆரணி, மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை அவர்களுக்கு நேரடியாகவோ அல்லது பதிவஞ்சல் மூலமாக தெரிவிக்கலாம் என கீழ்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது. அதற்கான விளம்பரக் கட்டணம் ரூ. 24000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| வ.எண் | தினசரி நாளிதழ் | விளம்பரம் செய்த நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | தினத் தநதி | 31.12.2017 | 4368/- |
| 2 | இந்து ஆங்கில நாளிதழ் | 01.01.2018 | 13440/- |
| 3 | தின மலர் | 05.01.2018 | 5796/- |
| | | **மொத்தம்** | **23604/-** |

அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுதிக்கலாம், இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம். 2. அவசர அவசியம் கருதி விளம்பரம் செய்த தொகையினை நாளிதழ் நிறுவனங்களுக்கு வழங்கலாம். (கோப்பு எண் 1720/எப்1/2017)

9) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தினசரி 33 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணி குப்பைகள் சேகரம் செய்து அகற்றும் பணிகள் சிறப்பு கவனம் செலுத்த வேண்டியுள்ளதாலும், விடுதலின்றி பணிகள் மேற்கொள்ள வேண்டியது மிக அவசியம் என்பதாலும்,குப்பை கிடங்கில் JCB கொண்டு குவியல்களாக உள்ள குப்பைகளை அகற்றி வார் உயரப்படுத்த வேண்டியுள்ளது. மூன்று நாட்களுக்கு தனியார் JCB மூலம் பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.50000/-க்கும் மேலும் வரப்பெற்ற விளைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனத்தின் விலாசம் | ஒரு மணி நேரத்திற்கு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஸ்ரீ நல்லாத்தூர் அம்மன் எர்த் மூவர்ஸ், சங்கீதவாடி கிராமம், ஆரணி தாலுக்கா | ரூ. 900/- |
| 2 | ஸ்ரீ வினாயகா எர்த் மூவர்ஸ், ஆரணி to ஆற்காடு ரோடு, அப்பந்தாங்கல், ஆரணி தாலுக்கா | ரூ. 800/- |

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் அனுமதிக்கலாம். 2. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ வினாயகா எர்த் மூவர்ஸ், நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். 3. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 2588/2014/எச்1)

10) இந் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 5 எண்ணிக்கைTATA ACE AUTO. 2 எண்ணிக்கை 407 மினிலாரி ஆகியவைகளுக்கு 31.01.2018ந் தேதி இன்சூரன்ஸ் முடிவடைகிறது. மேலும் ஒரு ஆண்டிற்கு யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தற்கு கீழ்கண்ட விவரப்படி இன்சூரன்ஸ் தொகை செலுத்தவும் அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ. 128830/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வாகனங்கள் விவரம் | இன்சூரன்ஸ் |
|---|---|---|

| | | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | 407 மினி லாரி TN25V4633 | ரூ. 20065/- |
| 2 | 407 மினி லாரி TN25V4633 | ரூ. 20065/- |
| 3 | TATA ACE AUTO TN25V9461 | ரூ. 17740/- |
| 4 | TATA ACE AUTO TN25V9462 | ரூ. 17740/- |
| 5 | TATA ACE AUTO TN25V9463 | ரூ. 17740/- |
| 6 | TATA ACE AUTO TN25V9464 | ரூ. 17740/- |
| 7 | TATA ACE AUTO TN25V9465 | ரூ. 17740/- |
| | மொத்தம் | ரூ. 128830/- |

அலுவலக குறிப்பு :-1. மன்றம் அனுமதியளிக்கலாம். 2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம். 3. மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 634/2016/எச்1)

11) ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் போது குடிநீர் வீட்டிணைப்புகளில் நேரடியாக விதிமுறைகளுக்கு புறம்பாக மின்மோட்டார் பொருத்தி குடிநீரினை எடுப்பதாக தெரிய வருகிறது. இந்த அறிவிப்பு கண்ட ஒருவார காலத்திற்குள் தாங்களாகவே மின் மோட்டார்களை அகற்றி விட தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு அகற்றப்படாத வீடுகளில் நகராட்சி பணியாளர்களை கொண்டு ஆய்வில் கண்டறியப்பட்டால், மின்மோட்டார் பறிமுதல் செய்வதுடன், குடிநீர் இணைப்பினையும் துண்டிப்பு செய்யப்படும். மேலும், இந் நகராட்சியில் தற்போது புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயல்பாட்டில் உள்ளதால், குடிநீர் விநியோகம் இனி தங்குதடையின்றி வழங்கப்படும் எனவும், புதிய குடிநீர் வீட்டினணப்புகள் பெற்று பயன்பெறுமாறு பொது மக்கள் அறியும் வண்ணம் ஆட்டோ மூலம் இரண்டு நாட்களுக்கு விளம்பரம் செய்ய உள்ளூர் அங்காடிகளில் விலைப்புள்ளி கோரியதில் வரப் பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் மேற்படி விளம்பர செலவினம் ரூ. 4600/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| வ. எண் | விலைப்புள்ளி வழங்கிய அங்காடி பெயர் மற்றும் விலாசம் | நாள் ஒன்றுக்கு (மைக் செட், பேட்டரி, ஆட்டோ, டீசல் மற்றும் ஆட் கூலி உள்பட) |
|---|---|---|
| 1 | ராசி சவுண்ட் சர்வீஸ்,<br>நெ. 1, GH ரோடு, (நகராட்சி அருகில்) ஆரணி | ரூ. 2300/- |
| 2 | ராஜா சவுண்ட் சர்வீஸ் & சப்ளையர்ஸ்,<br>16A தச்சூர் ரோடு, கொசப்பாளையம், ஆரணி, | ரூ.2400/- |
| 3 | பிரகாஷ் சவுண்ட் சர்வீஸ்,<br>நெ. 17. கார்த்திகேயன் ரோடு,<br>(அண்ணாசிலை எதிரில்) ஆரணி. | ரூ. 2500/- |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள ராசி சவுண்ட் சர்வீஸ், ஆரணி விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம். (கோப்பு எண் 2844/இ1/2017)

12) ஆரணி நகராட்சிக்கு சொந்தமான ஆணையர் அலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் ஈப்பு வாகனம் எண் TN25AX9318 மாவட்ட ஆட்சித் தலைவர் திருவண்ணாமலை அவர்களின் ஆய்வுக் கூட்டத்திற்கு சென்று கொண்டிருக்கும் போது வாகனம் திடீரென பேட்டரி பழுதடைந்து வழியில் நின்று விட்டது மேலும், வாகனத்தின் பின்புறம் உள்ள கதவு பழுதடைந்து திறக்க முடியாமல் பயணத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, மேற்படி, இரண்டு பணிகள் மேற்கொள்ள அரசு

அங்கீகாரம் பெற்ற பணிமனையில் விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப் பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் செலவினம் ரூ. 29000/-க்கும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

1. ஜவஹர் ஆட்டோ ஒர்க்ஸ்,
   77பி மத்தலங்குளத் தெரு, ரூ. 28900/-
   திருவண்ணாமலை.
2. கண்ணம்மாள் ஆட்டோ ஒர்க்ஸ்,
   18.முத்துவிநாயகர் கோயில் தெரு, ரூ. 30450/-
   திருவண்ணாமலை.

3. திருமலை வெங்கடேஷ்வரா ஒர்க் ஷாப்,
   கீழ்நாச்சிப்பட்டு, திண்டிவனம் ரோடு, ரூ. 29750/-
   திருவண்ணாமலை.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் விலைப்புள்ளி பெற்று குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணியினை செய்து முடித்தை மன்றம் ஏற்கலாம்.(கோப்பு எண் 189/இ1/2018)

13) இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் மகப்பேறு ஆயாவாக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 31.12.2017ல் ஓய்வு பெற்ற திருமதி. க. பழனியம்மாள் என்பவர்க்கு கீழ்கண்டுள்ளவாறு :-

1) சிறப்பு சேமநல நிதி சந்தா ரூ- 2960/-
2) சிறப்பு சேமநல நிதி அதற்கான வட்டி ரூ. 11646/-
3) நிர்வாக பங்குத் தொகை ரூ. 10000/-

**ஆக மொத்தம் ரூ. 24606/-**

வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். (கோப்பு எண் 174/பி2/2018)

14) இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 31.01.2018ல் ஓய்வு பெற்ற திரு. எம்.முருகேசன் என்பவர்க்கு கீழ்கண்டுள்ளவாறு :-

1) சிறப்பு சேமநல நிதி சந்தா ரூ- 2960/-
2) சிறப்பு சேமநல நிதி அதற்கான வட்டி ரூ. 30114/-
3) நிர்வாக பங்குத் தொகை ரூ. 10000/-

**ஆக மொத்தம் ரூ. 43074/-**

மேற்கண்டவாறு தொகையினை வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். (கோப்பு எண் 215/பி2/2018)

15) ஆரணி நகராட்சியில் 14வது மத்திய நிதிக்குழு மான்ய நிதி 2017-2018-ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள 25.01.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 01 கே.கே நகர் குறுக்கு தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 11.20 | P. சந்திரசேகர்<br><br>E .இளங்கோவன் | 0.10% குறைவு<br><br>0.30 %. அதிகம் |
| 2 | வார்டு எண் 01 கே.சி.கே நகர் தெருவிற்கு தார்சாலை அமைத்தல் | 4.50 | திலகவதி கன்ஸ்ட்ரக்சன்ஸ்<br>S. உஷாராணி | 0.30 % குறைவு<br><br>0.90 %. அதிகம் |
| 3 | வார்டு எண் 27 அண்ணா நகர் முதல் தெரு தொடர்ச்சி பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 8.20 | P. சந்திரசேகர்<br><br>E .இளங்கோவன் | 0.10% குறைவு<br><br>0.30 %. அதிகம் |
| 4 | வார்டு எண் 24 என்.எஸ் நகர் பகுதியில் சிமெண்ட் சாலை, சிறுபாலம் அமைத்தல் | 5.00 | P. சந்திரசேகர்<br><br>E .இளங்கோவன் | 0.05 % குறைவு<br><br>0.50 %. அதிகம் |
| 5 | வார்டு எண் 25 பாலாஜி நகர் பின்புறம் தார்சாலை அமைத்தல் | 6.70 | திலகவதி கன்ஸ்ட்ரக்சன்ஸ்<br>S. உஷாராணி | 0.10% குறைவு<br><br>0.30 %. அதிகம் |
| 6 | வார்டு எண் 29 பிச்சாண்டி நகர் பிரதான சாலையில் தார்சாலை அமைத்தல் | 8.50 | திலகவதி கன்ஸ்ட்ரக்சன்ஸ்<br>S. உஷாராணி | 0.10% குறைவு<br><br>0.20 %. அதிகம் |
| 7 | வார்டு எண் 30 வி.ஏ.கே நகர் விரிவு பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 8.10 | P. சந்திரசேகர்<br><br>E .இளங்கோவன் | 0.10% குறைவு<br><br>0.30 %. அதிகம் |
| 8 | வார்டு எண் 30 பாஸ்கர் நகர் பிரதான சாலையில் தார்சாலை அமைத்தல் | 8.80 | திலகவதி கன்ஸ்ட்ரக்சன்ஸ்<br>S. உஷாராணி | 0.20% குறைவு<br><br>0.30 %. அதிகம் |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேற்படி பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகரிக்கலாம். மேலும், இப்பணிகள் திட்டப் பணி என்பதால் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 2865/இ1/2017)

16) ஆரணி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு. 1. கமண்டல நாகநதி தலைமை நீரேற்று நிலையம், 2. தச்சூர் தலைமை நீரேற்று நிலையம், 3 ஆற்காடு தரைப்பாலம் நீரேற்று நிலையம், ஆற்காடு முப்பதுவெட்டி தலைமை நீரேற்று நிலையம் ஆகிய நான்கு நீரேற்று நிலையங்களல் திரவ குளோரினேஷன் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. தற்போது திரவ குளோரினேஷன் இருப்பு தீர்ந்து விடும் சூழ்நிலை உள்ளதால், மேற்காணும் நான்கு நீர் இறைவை நிலையங்களில் இரண்டு மாதங்களுக்கு தேவையான திரவ குளோரினேஷன் நிரப்ப ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 2.60 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு மன்றம் ஒப்புதல் அளிக்காலம். மேலும் குடிநீர் அவசர அவசிய்ம கருதி மன்ற அனுமதி எதிர் நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 690/இ1/2018)

17) ஆரணி நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவில் குடிநீர் விநியோக பயன்பாட்டில் இருந்து வரும் லாரி வண்டி எண் TN25Y0238 05.01.2018 அன்றுடன் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் தகுதிச் சான்று முடிவடைந்து விட்டது. எனவே, மீண்டும் தகுதிக்கான சான்று

பெற வேண்டியுள்ளதால், அதில் ஏற்பட்டுள்ள பழுதினை சரி செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் விட்டு பழுதினை சரி செய்ய ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ.131000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், இச் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். மேலும், பொது மக்களின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி நகர மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 690/இ1/2017)

18) ஆரணி நகராட்சி வார்டு எண் 01 அருந்ததிப்பாளையம் தெரு, வார்டு எண் 03 வெற்றிலைக்காரத் தெரு, சாந்தா தெரு, வார்டு எண் 06 ஆசாத் தெரு, வார்டு எண் 07 ஆண்டாள் சன்னதி தெரு, வார்டு எண் 08 பரசுராமன் தெரு,பாப்பாத்தியம்மன் கோயில் தெரு, தணிகாசலம் தெரு, வார்டு எண் 09 இராமகிருஷ்ணா பேட்டை மூன்றாம் தெரு, இந்திரா நகர், ஷபியுல்லா தெரு, பையூர் ரோடு, ஜீவானந்தம் தெரு, வார்டு எண் 10 விநாயகர் கோயில் தெரு, வார்டு எண் 11 சத்தியமூர்த்தி ரோடு, வார்டு எண் 12 மேனேஜர் முருகேசன் தெரு, வார்டு எண் 13 சின்னப்பட்டுநூல்காரத் தெரு, வார்டு எண் 15 பெரிய தெரு, களத்து மேட்டுத் தெரு,வார்டு எண் 16 மல்லி பிள்ளையார் கோயில் தெரு, வார்டு எண் 17 தர்மராஜா கோயில் தெரு, கோபால் தெரு மெயின் தெரு, கோபால் தெரு குறுக்கு தெரு, வார்டு எண் 18 அம்பேத்கார் நகர், வார்டு எண் 22 சாமி தெரு,கோவிந்தராஜன் தெரு நகராட்சி பள்ளி, வார்டு எண் 24 தாது தெரு, வார்டு எண் 25 பிள்ளையார் கோயில் தெரு, வார்டு எண் 27 வீரபத்திரன் தெரு, கமண்டல நாகநதி தெரு, வார்டு எண் 28 பள்ளிக்கூடத் தெரு, அனந்தபுரம் தெரு நகராட்சி பள்ளி, தர்மராஜா கோயில் தெரு, வார்டு எண் 29 காந்தி நகர் 1வது தெரு,பூங்கா அருகில், காந்தி நகர் 2வது தெரு, வார்டு எண் 30 ஜெயலட்சுமி நகர், வார்டு எண் 32 கோட்டை மேற்கு தெரு ஆகிய தெருக்களில் உள்ள சிறுமின் விசை பம்புகள் பழுதடைந்து இயக்க முடியாமல் உள்ளது. எனவே, மேற்காணும் சிறுமின் விசை பம்புகள் பழுதுகள் சரி செய்ய ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ.1,00,000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், இச் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். மேலும், பொது மக்களின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி நகர மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 690/இ1/2017)

19) ஆரணி நகராட்சி கோட்டை மைதானத்தில் 2017-2018ம் ஆண்டு ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ரூ.75.00 லட்சம் மதிப்பீட்டிலும், ஆரணி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தில் ரூ. 13.50 லட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்ட நடைபாதை மற்றும் சுற்றுச் சுவர் 07.02.2018 அன்று திறப்பு விழாவிற்கு வருகை தரும் மாண்புமிகு இந்துசமயம் மறற்றும் அறநிலைத்துறை அமைச்சர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் பெருமக்களை வருக வருக என ஆரணி நகராட்சி சார்பாக வரவேற்பு செய்து பின்வரும் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது அதற்கான விளம்பர கட்டணம் ரூ. 62580/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | தின மணி நாளிதழ் | 07.02.2018 | ரூ. 22260/- |
| 2. | தினத் தந்தி நாளிதழ் | 07.02.2018 | ரூ. 19320/- |
| 3. | தின மலர் நாளிதழ் | 07.02.2018 | ரூ. 21000/- |
| | | மொத்தம் | ரூ.62580/- |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.இச் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

20) ஆரணி நகராட்சி வார்டு எண் 21 சீனிவாசன் தெருவில் உள்ள சிறுமின்விசை பம்பு பழுதடைந்தடைந்துள்ளதால், ஆழ்துளை குழாய் கிணற்றில் சிக்கியுள்ள மின் மோட்டாரினை வெளியே எடுத்து பழுதினை சரி செய்து மீண்டும் பொருத்தி தர ஆகும் தோராய செலவனம் ரூ.10000/- மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது

அலுவலக குறிப்பு :.- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும் மேற்படி பணியினை மேற்கொள்ள உள்ளூர் அங்காடிகளில் விலைப்புள்ளி பெற்று குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணியினை செய்து முடித்ததை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 690/இ1/2017)

21) ஆரணி நகராட்சி வார்டு எண் 18 கோபால் தெருவில் உள்ள சிறுமின்விசை பம்பு பழுதடைந்தடைந்துள்ளதால், ஆழ்துளை குழாய் கிணற்றில் சிக்கியுள்ள மின் மோட்டாரினை வெளியே எடுத்து பழுதினை சரி செய்து மீண்டும் பொருத்தி தர ஆகும் தோராய செலவனம் ரூ.10000/- மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :.- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும் மேற்படி பணியினை மேற்கொள்ள உள்ளூர் அங்காடிகளில் விலைப்புள்ளி பெற்று குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணியினை செய்து முடித்ததை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 690/இ1/2017)

22) இந் நகராட்சி அலுவலக கணினி அறையில் மின் வயரிங் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் பணிகள் செய்ய சிரமமாக உள்ளது. மேலும் கணினி அறையில் குளிர்சாதன பெட்டி ஒன்று புதியதாக அமைக்கவும், சிறிய மின்விசிறிகள் 3 எண்ணிக்கை மற்றும் 12 எண்ணிக்கை புதியதாக குழல் விளக்குகள் பிட்டிங்குடன், மும்முனை மெயின் சுவிட்ச், கேபிள் அமைக்கவும், பொதுப் பிரிவில் புதியதாக வாஷ்பேசின் அமைக்கவும் ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ.1.60 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேற்படி செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 690/இ1/2017)

23) இந் நகராட்சி அலுவலக ஆணையர் அறையில் உள்ள கதவு தானியங்கி இயந்திரம் பழுதடைந்துள்ளதை புதியதாக மாற்றவும், கணினி அறையில் உள்ள கண்ணாடி கதவுகள் சரி செய்யவும், மேலும், பொறியாளர் அறையில் மின்னஞ்சல் சரியாக இயங்காத காரணத்தால் அதற்கு தேவையான MODAM புதியதாக பொருத்திடவும் ஆகும் தோராய செலவினம் ரூ.30000/-க்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும் மேற்படி பணியினை மேற்கொள்ள உள்ளூர் அங்காடிகளில் விலைப்புள்ளி பெற்று குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணியினை செய்து முடித்ததை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 690/இ1/2017)

24) திருவண்ணாமலை நகராட்சி ஈசான்ய மைதானத்தில் 18.,08,2017 முதல் 27,08,2017வரை நடைபெற்ற புத்தக திருவிழா தொடர்பாக. மாவட்ட ஆட்சியர் தலைமையில் 04.07.2017 அன்று

நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் திருவணணாமலை மாவட்டம் முழுவதும் 10X10 அடி அளவில் விளம்பர பதாகைகள் அமைக்க, வெற்றி டிஜிட்டல், திருவண்ணாமலை என்ற நிறுவனத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் விளம்பர பதாகை (பேனர், சாரம், சட்டம்) ஒரு இடத்தில் அமைக்க ரூ. 2700/- கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆரணி நகரின் 1. மணிகூண்டு அருகில், 2. எம்.ஜி.ஆர் சிலை(பழைய பேருந்து நிலையம் அருகில்) 3. சூரியகுளம் அருகில், 4. கொசப்பாளையம், 5. தமிழ்நாடு மின்வாரியம் அலுவலகம்,சைதாப்பேட்டை,ஆரணி ஆகிய ஐந்து இடங்களில் வைக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை அவர்களின் அறிவுரைப்படி, மேற்காணும் ஐந்து இடங்களில் வைக்கப்பட்ட விளம்பர பதாகைகளுக்கு ரூ.13500/- நேர் செய்த வழங்க தெரிவிக்கப்பட்டது. ஆகவே, மேற்காணும் தொகையை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு செலுத்த மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 2018/எப்1/2017)

25) ஆரணி நகராட்சிக்கு சொந்தமான அலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் ஈப்பு வாகனம் எண் TN25AU6961க்கு இன்ஜின் ஆயில் மாற்றி பல மாதங்கள் ஆகின்றது. இதனால் வாகனம் அடிக்கடி பழுது ஏற்படுகிறது மேலும், வாகனத்தில் சிறுசிறு பழுதுகள் ஏற்பட்டுள்ளன.. அதனை சரி செய்ய மேற்படி வாகனத்தை கொள்முதல் செய்த நிறுவனமான ஜெயின் கார்ஸ் (மகேந்திரா & மகேந்திரா) வேலூர் பழுதுகள் சரி செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப் பெற்ற விலைப்புள்ளியில் செலவினம் ரு. 78000/- ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி வாகனத்தை பழுது சரி செய்ய ஆகும் மேற்படி, செலவினத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், 2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி வாகனம் ஜெயின் கார்ஸ் (மகேந்திரா & மகேந்திரா) வேலூர் நிறுவனத்தில் விட்டு பழுதுகள் சரி செய்தற்கு உண்டான தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 0095/இ1/2018)

**தனிஅலுவலர்,**
**ஆரணி நகராட்சி**